



# காட்டு வாழ்க்கை வாழலாம்!

## வித்தியாசமான விடுமுறைகள்

உங்கள் கம்பெனியில் வேலை பார்க்கிற ஊழியர்களிடம் ஒற்றுமை இல்லையா? ஆளாளுக்கு சண்டை போட்டுக் கொள்கிறார்களா?

கவலையை விடுங்கள். உங்கள் கம்பெனி ஊழியர்களையெல்லாம் காட்டுக்கு அழைத்துக் கொண்டு போய் நான்கு நாட்கள் தங்க வையுங்கள். அப்புறம் பாருங்கள், அவர்கள் எவ்வளவு ஒற்றுமையாகச் செயல்படுகிறார்கள் என்று.

இதென்ன, புது சிந்தனையாக இருக்கிறதே என்று நினைக்காதீர்கள். சென்னை, டெல்லி, மும்பை, பெங்களூர், ஹைதராபாத் போன்ற நகரங்களில் உள்ள பெரிய பெரிய கம்பெனிகள் இந்த யுக்தியைத்தான் சமீபகாலமாக பயன்படுத்தி வருகின்றன.

கம்பெனி ஊழியர்களை காட்டுக்கு அழைத்துச் சென்று விளையாட்டுக் காட்டுவதற்கென்றே பல நிறுவனங்களும் உருவாகி விட்டன. சென்னையில்கூட இது மாதிரியான நிறுவனங்கள் மூன்று, நான்கு வந்துவிட்டன.

"எங்கள் வேலை கம்பெனி ஊழியர்களை டூர் அழைத்துச் செல்வது அல்ல, அந்த வேலையைச் செய்வதற்கு வேறு எத்தனையோ பேர் இருக்கிறார்கள்" என்றபடி நம்மோடு பேச ஆரம்பித்தார், வைல்டர் டிரயல்ஸ் அட்வென்சர் கிளப்பின் தலைவர் மேஜர் அசோக் கந்தாடி.

"நகரங்களில் ஒரே மாதிரியான வாழ்க்கை வாழ்ந்து வெறுத்துப் போன கம்பெனி ஊழியர்களுக்கு ஒரு வித்தியாசமான சூழ்நிலையை ஏற்படுத்தித் தருவதுதான் எங்கள் நோக்கம். இந்த வித்தியாசமான சூழ்நிலையில் அவர்களுக்கு மலையேற்றம், தடைகளைக் கடந்து செல்லுதல், படகுப் போட்டி, பாறை ஏறுதல் என்று பலவகையான விளையாட்டுகளைச் சொல்லித் தருகிறோம். இந்த விளையாட்டுகளில் ஊழியர்கள் ஈடுபடும்போது, அவர்களை அறியாமலேயே அவர்களிடம் ஒற்றுமை பிறக்கிறது. குழுவாக இணைந்து ஒரு பிரச்னையைத் தீர்ப்பது எப்படி? என்பதையும் தெரிந்து கொள்கின்றனர். ஆக, ஒருமுறை இப்படி ஒரு பயணம் மேற்கொண்டால் அடுத்த ஒரு வருடத்துக்கு பல விதமான மனஸ்தாபங்களுக்கு இடமே இருக்காது'' என்கிறார் மேஜர் அசோக்.



சத்தியமங்கலம் காட்டுப் பகுதி, ஏலகிரி, ஈரோட்டுக்கு அருகிலுள்ள கீர்மங்கலம், திருப்பதி, கூர்க் என்று பல மலைப் பிரதேசங்களுக்கு ஊழியர்களை அழைத்துச் செல்கிறது இந்த நிறுவனம்.

''காட்டுப் பகுதியில் மலையேற ஆரம்பித்தவுடன் பலர் அழ ஆரம்பித்து





விடுவார்கள். நகரங்களில் எல்லா இடங்களுக்கும் டூ வீலர்களில் மட்டுமே பயணம் செய்தவர்களுக்கு நடப்பது முதலில் கஷ்டமாகத்தான் இருக்கும். ஆனால் தொடர்ந்து இரண்டு, மூன்று நாட்கள் நடந்த பிறகு 'இன்னும்கூட கொஞ்சம் நடந்தால் நன்றாக இருக்குமே!' என்பார்கள். காட்டு வாழ்க்கை மனிதர்களை முழுவதுமாக மாற்றிவிடும்" என்கிறார் மேஜர் அசோக்.



மேஜர் அசோக்

"காட்டில் யானை இருக்குமே, புலி இருக்குமே என்றெல்லாம் கவலைப்பட வேண்டிய அவசியமில்லை. காட்டிலாகா அதிகாரிகள், கைடுகள், பழங்குடி மக்களின் உதவியோடு காட்டில் விலங்குகள் நடமாடாத பகுதிகளில் மட்டுமே ஊழியர்களை அழைத்துச் செல்வோம். எனவே, நூறு சதவிகிதம் பாதுகாப்பு உண்டு" என்றும் சொல்கிறார் அவர்.

இந்த மாதிரி கேம்ப்புகளுக்கு வருகிற ஆண்களை விட, பெண்கள் அதிகம் ரசித்து மகிழ்கிறார்களாம். "சென்னையிலேயே பிறந்து வளர்ந்த எங்களுக்கு இது வித்தியாசமான அனுபவம். வேண்டா வெறுப்பாக கேம்புக்குப் போன நாங்கள், புத்துணர்ச்சியோடு சென்னை வந்து சேர்ந்தோம்" என்கிறார் ஐ.டி. கம்பெனியில் வேலை பார்க்கும் சுஜாதா.

எல்லோரையும் தூரத்தில் உள்ள காட்டுப் பகுதிகளுக்கு அழைத்துச் செல்வது இயலாத காரியம். எனவே, மகாபலிபுரத்துக்குப் பக்கத்திலேயே கேம்ப் அடிக்கிறார் அட்வென்சர் ஜோன் என்கிற நிறுவனத்தை நடத்தி வரும் எஸ்.ஆர். ராய். "காட்டுப் பகுதியில் கிடைக்கும் அனுபவம் எல்லாமே கடலையொட்டிய மகாபலிபுரத்திலேயே நாங்கள் கொடுத்து விடுகிறோம்" என்கிறார் அவர்.

-ஏ.ஆர். குமார்

---

**எக்ஸ்பிரஸ் கதைகள்**

### பெண் வீட்டார்



ஷாலினியைப் பார்க்க வருகிறார்கள். பெரிய இடம். பெற்றவள் கண் கலங்கிக் கொண்டிருந்தாள். ''ஏண்டி கலங்கறே... வர்றவங்க பெரிய இடம்... நம்ம பெண்ணை கண் கலங்காம பார்த்துக்குவாங்க...'' ஆறுதல் கூறினார் பரமசிவம்.

படகு போல கார் வந்து நின்றது, உள்ளிருந்து பட்டுப் புடவை, கோட், சூட்டுடன் பிரவேசித்தார்கள். ஷாலினியைப் பார்த்தார்கள்.

"எங்களுக்கு ஷாலினியை ரொம்பப் பிடிச்சுப் போச்சு..." என்றார்கள், மன நிறைவாய். இதைக் கேட்டு ஷாலினி அழுதாள். 'ஏம்மா ஏழ்மையில் என்னைப் பெத்துட்டு இப்போ தத்துக் கொடுக்கறே?' - மனுசுக்குள் புழுங்கினாள்.